**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்**

**முன்னிலை. திரு. D.பொன்வேந்தன்., பி.டெக், எம்.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, வானூர்**

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 02 ஆம் நாள் வியாழன்கிழமை.

**(2057-திருவள்ளுவராண்டு, பராபவ வருடம், ஆனி மாதம் 18 ஆம் நாள் வியாழக்கிழமை)**

**அ.வ.எண். 47/2020**

**CNR NO:- TNVP35-000129-2025**

முத்துக்குமார். ...வாதி

**/எதிர்/-**

1. சிவக்குமார்.
2. மாவட்ட ஆட்சியர், விழுப்புரம்.
3. வட்டாட்சியர், வானூர்.
4. வட்டார வளர்ச்சி அலுவலர், திருச்சிற்றம்பலம். ... பிரதிவாதிகள்.

இவ்வழக்கானது 22.06.2026-ம் தேதியன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.மு.முனுசாமி அவர்கள் ஆஜராகியும், 1-ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.அனந்தவிஜயன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் 2 முதல் 4 பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி மற்றும் 1-ம் பிரதிவாதி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.02 17:36:50 +0530

## தீர்ப்புரை

**1.** வழக்கு சொத்தான தனிப்பட்ட சந்தினை வாதி அமைதியான முறையில் அனுபவித்து வருவதை 1 முதல் 4 பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, முகவர்களோ எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யாமல் இருக்க பிரதிவாதிகள் மீது நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரியும், செலவுத் தொகை கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்குரை சுருக்கம்** :-

**2.1)** வழக்கு சொத்துக்கள் ஆதியில் வாதியின் பாட்டனாரான முத்தையா முதலியார் என்பவரின் பொதுகுடும்ப பூர்வீக சொத்துக்கள் என்றும், மேற்படி சொத்துக்களை அவர்களது மகன்களான திருநாவுக்கரசு முதலியார், ராமலிங்க முதலியார் மற்றும் மகாதேவ முதலியார் ஆகியோர்கள் கடந்த 13.02.1964-ம் தேதியில் பாகப்பத்திரம் மூலம் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது.

**2.2)** மேற்படி திருநாவுக்கரசு முதலியார் தான் வாதியின் தகப்பனார் என்றும், மேற்படி திருநாவுக்கரசு முதலியாருக்கு வாதி முத்துக்குமார், சிவராஜ், கந்தசாமி மற்றும் சங்கர் ஆகியோர்கள் மகன்கள் என்றும், அதில் கந்தசாமி என்பவர் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார் என்றும், சிவராஜ் என்பவர் சென்னையில் வசித்து வருகிறார் என்றும், சங்கர் என்பவர் புளிச்சப்பள்ளம் கிராமத்தில் வசித்து வருகிறார் என்றும், வழக்கு சொத்து உள்ள கிராமத்தில் வாதியும், சங்கர் என்பவரும் வசித்து வருகிறார்கள் என்றும், வழக்கு சொத்துக்களை பொது குடும்ப மேலாளர் என்ற முறையில் வாதி பரிமாரித்து வருகிறார் என்று சொல்லப்பட்டுள்ளது.

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.02 17:37:03 +0530

**2.3)** 13.02.1964-ம் தேதியிட்ட பாகப்பத்திரத்தில் வழக்கு சொத்தானது "சி" அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி "சி" அட்டவணை சொத்திற்கும், வாதியின் வீட்டிற்கு மேற்கில் வடக்கு தெற்காக சந்து ஒன்று அமைந்துள்ளது என்றும், மேற்படி சந்தானது வாதி மற்றும் வாதியின் சகோதரர்களுக்கு மட்டும் பொதுவில் பாத்தியமானது என்றும், மேற்படி சந்தில் 1-ம் பிரதிவாதிக்கு எந்தவித பாத்தியமோ, அனுபவமோ இல்லை என்றும், மேற்படி வழக்கு சொத்தான சந்தில் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு வடக்கு தெற்காக கம்பி வேலியை வாதி அமைத்துள்ளார் என்றும், தற்பொழுது வரை அந்த வேலி இருந்து வருகிறது என்று சொல்லப்பட்டுள்ளது.

**2.4)** 1-ம் பிரதிவாதி பண பலம் மற்றும் படைபலம் மிக்கவர் என்றும், வாதி மற்றும் அவரது 3 சகோதரர்கள் அனுபவித்து வரும் வழக்கு சந்தினை 1 முதல் 4 பிரதிவாதிகள் எவ்வித தடையும் இடைஞ்சலும் செய்யாமல் இருக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது.

**3.** நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக்கொண்டும் 2 முதல் 4 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் கடந்த 24.08.2022-ம் தேதியில் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**<u>4. 1-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>: -**

**4.1)** வழக்குரை பொருண்மைகள் அனைத்தும் வழக்குரைக்காக சொல்லப்பட்டுள்ள பொய்யான பொருண்மைகள் என்றும், வழக்கு சொத்தானது

கிராம நத்தம் புல எண்.544/13-ல் அமையபெற்ற 550 சதுர மீட்டர் சந்து என்றும், மேற்படி வழக்கு சொத்தான சந்தானது நெடுங்காலமாக அரசு ஆவணங்களில் பொது சந்தாகவே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், வழக்கு சந்தில் யாருக்கும் தனிப்பட்ட உரிமை கிடையாது என்றும், வழக்கு சொத்திற்கு அருகே உள்ள நத்தம் சர்வே எண்.544/8, 544/12-ல் 1-ம் பிரதிவாதிக்கு உரிமையான இடமும், வீடும் உள்ளது என்றும், மேற்படி வீட்டை அடைய வழக்கு சந்தான புல எண்.544/13-ல் உள்ள சந்தின் மூலம் தான் அடைந்து வருவதாகவும், பொதுமக்களும் வழக்கு சந்தினை பயன்படுத்தி வருகின்றனர் என்று சொல்லப்பட்டுள்ளது.

**4.2**) வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள பாகப்பத்திரத்தில் வழக்கு சொத்தானது வாதியின் தகப்பனாருக்கு ஒதுக்கப்படவில்லை என்றும், வழக்கு சந்தினை தவறான வழியில் வாதி அடைய முற்பட்டதால் வாதியின் மீது கடந்த 05.09.1919-ம் தேதியில் 3-ம் பிரதிவாதியிடம் நடவடிக்கை எடுக்க கோரி 1-ம் பிரதிவாதி மனு கொடுத்தார் என்றும், மேற்படி மனுவின் விசாரணையில் வழக்கு சொத்தானது பொது சந்து என்று கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை கொடுத்துள்ளார் என்றும், பின்னிட்டு 20.01.2020-ம் தேதியில் வழக்கு சொத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றும், அதன் பின்னிட்டு ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும், மீண்டும் வழக்கு சந்தினை வாதி ஆக்கிரமிக்க முயற்சி செய்ததால் 1-ம் பிரதிவாதி கடந்த 07.09.2020-ம் தேதியில் 3-ம் பிரதிவாதியிடம் வாதியின் பேரில் நடவடிக்கை எடுக்க கோரி மனு கொடுத்தார் என்றும், அதன் பின்னிட்டு காவல்துறையினரின் உதவியுடன் வழக்கு சொத்திலுள்ள ஆக்கிரமிப்பை



PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.02 17:37:13 +0530

அகற்றுவதற்கு 11.09.2020-ம் தேதியில் 3-ம் பிரதிவாதி ஒரு அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றும், காவல்துறையினர் ஆக்கிரமிப்பை அகற்ற முயற்சி செய்தபொழுது வாதி இந்த அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது.

**4.3)** வாதி தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை பத்திரம் பதிவு செய்யப்படாதது என்றும், அந்த பாகப்பத்திரத்தின் சக்குப்பந்தியில் பொது நாரா சந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இதிலிருந்தே வாதியின் முன்னோர்களுக்கு வழக்கு சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்று தெரியவருகிறது என்றும், வழக்கு சந்தானது தற்பொழுது வரை பொது சந்தாக உள்ளது என்றும், வழக்குரைக்கு வழக்கு மூலம் இல்லாததால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது.

**5. வாதியின் வழக்குரை, 1-ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை, ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வழக்கின் தீர்வுக்காக 07.09.2022-ம் தேதியில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.**

| ISSUES. | |
|---|---|
| **1.** | **Whether the plaintiff was in the possession and enjoyment over the suit property at the time of filing of this suit?** |
| **2.** | **Whether the plaintiff is entitled for permanent injunction as prayed for?** |
| **3.** | **To what other reliefs the plaintiff is entitled to?** |

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.02 17:37:19 +0530

**6)** வாதி தரப்பில் வாதி முத்துக்குமார் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்தபொழுது வா.சா.1-ன் மூலம் பி.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஓர் தணிகைவேல் என்பவர் வாதி தரப்பில் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலம் எந்த ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை. ஓர் தண்டபானி என்பவர் வாதி தரப்பில் வா.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலம் எந்த ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

**7.** 1-ம் பிரதிவாதி தரப்பில் 1-ம் பிரதிவாதி சிவக்குமார் பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் தரப்பில் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஓர் ராம்குமார் என்பவர் பி.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலம் எந்த ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

**8. ஆவணங்கள்**: -

**8.1)** 13.02.1964 தேதியிட்ட முத்திரை தாளில் எழுதப்படாத, பதிவு செய்யப்படாத பாகப்பத்திரம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில் மேற்படி ஆவணமானது முத்திரை சட்டத்தின் படி முத்திரை தாளில் எழுதப்படாததாலும், பதிவு சட்டத்தின் படி பதிவு செய்யப்படாததாலும் மேற்படி ஆவணத்தை வழக்கில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. 22.07.2019 தேதியிட்ட விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு வாதி கொடுத்த புகார் மனுவின் நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.2 மனுவிற்கான ரசீது வா.சா.ஆ.3 ஆக குறியீடு


PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.02 17:37:25 +0530

செய்யப்பட்டுள்ளது. 24.08.2020 தேதியிட்ட வானூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களிடம் வாதி கொடுத்த மனு வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகாரிற்க்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**8.2)** 10.09.1998 தேதியிட்ட வாதியின் தகப்பனாரான திருநாவுக்கரசு என்பவரின் இறப்புச் சான்றிதழ் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில் முத்தையா மகன் திருநாவுக்கரசு என்பவர் 08.09.1998-ல் இறந்ததற்கான இறப்புச் சான்றிதழ் என்று தெரியவருகிறது. 11.03.1991, 08.06.1992, 05.04.2012, 24.03.2014, 06.07.2017, 15.07.2019 தேதியிட்ட வீட்டு வரி ரசீதுகள் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 31.03.2008, 25.09.2012, 06.10.2014, 15.07.2019 தேதியிட்ட வீட்டு வரி ரசீதுகள் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 09.09.2015, 09.09.2015, 29.11.2015, 25.01.2016, 20.05.2016, 23.05.2016, 28.05.2016, 22.07.2016, 15.11.2016, 20.01.2018, 09.11.2018, 14.03.2019, 13.05.2019, 18.01.2020, 18.01.2020, 06.03.2020, 26.05.2020, 13.07.2020 தேதியிட்ட மின் கட்டண ரசீதுகள் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதியின் ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**8.3)** வழக்கு சொத்தை காண்பிக்கும் புல வரைபடம் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 21.09.1938 தேதியிட்ட மாண்பமை திண்டிவனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அ.வ.எண்.418/1937 வழக்கில் பிறப்பித்த தீர்ப்பாணையின் சான்று நகல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

21.06.1965 தேதியிட்ட அருணாச்சலம் முதலியார் என்பவர் அய்யா முதலியார் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 10.08.2005 தேதியிட்ட P.A.தண்டபானி என்பவர் T.சிவராஜ் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**8.4)** புல எண்.544N-ன் புல வரைபடம் கணிணி நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 04.05.1959 தேதியிட்ட ஆறுமுக முதலியார் என்பவர் சுப்பு முதலியார் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 07.10.1995 தேதியிட்ட புதிய புல எண்.544/8 பழைய புல எண்.153/23 பா-விற்கு சிங்கார முதலியார் என்பவரின் மகன் வேதாசலம் என்பவர் பெயரில் வழங்கப்பட்ட மனைவரி தோராய பட்டா பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 07.07.2015, 05.05.2016, 06.07.2016, 25.01.2017 தேதியிட்ட மின் கட்டண ரசீதுகள் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 04.03.1988 தேதியிட்ட வீட்டு வரி ரசீது பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.1 ஆவணமானது வா.சா.1-ன் குறுக்கு விசாரணையின் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.1 விசாரணையின் போது, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட போது பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் செய்யப்பட்டுள்ளது. இரண்டு முறை பி.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி 1-ம் பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களின் வரிசை இத்தீர்ப்பின் மூலம் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.5 ஆக வரிசைப்படுத்தப்படுகின்றது.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.02 17:37:36 +0530

**9.** வாதி மற்றும் 1-ம் பிரதிவாதி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர்.

**10. எழுவினா 1 மற்றும் 2-ற்கான தீர்வு: -**

**10.1)** வழக்கு சொத்தானது கிராம நத்தம் சர்வே எண்.582, புதிய சர்வே எண்.153/23-ல் அமைய பெற்றுள்ள கிழக்கு மேற்கு 12 ஜாதியடி, வடக்கு தெற்கு 129 ஜாதியடி அளவு கொண்ட வாதியின் குடும்பத்தாருக்கு மட்டும் பாத்தியப்பட்ட சந்து என்றும், மேற்படி சந்தை வாதி அனுபவித்து வருவதை பிரதிவாதிகள் இடையூறு செய்ய கூடாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சந்தானது வாதியின் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்ட தனி சந்து என்றும், அதில் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.

**10.2)** மாறாக வழக்கு சந்தானது வாதியின் குடும்பத்தாருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சந்தில்லையென்றும், பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி வரும் பொது சந்தென்றும், வருவாய் துறை ஆவணங்களிலும் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று 1-ம் பிரதிவாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.

**10.3)** ஓர் வெற்று உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்கில் வழக்கு சொத்தில் வாதி அனுபவத்தில் இருப்பதை நிரூபிக்க வேண்டியது தான் வாதியின் முதன்மையான கடமையாகும். வழக்கு சொத்தானது வாதியின் தகப்பனாருக்கு "சி" அட்டவணை சொத்தாக வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்தரத்தின்படி கிடைக்கப்பெற்ற



PONVENTHAN D Digitally signed by PONVENTHAN D Date: 2026.07.02 17:37:41 +0530

சொத்து என்று வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தை பரிசீலனை செய்கையில் மேற்படி ஆவணமானது முத்திரை தாளில் எழுதப்படாமல் வெற்றுத் தாளில் எழுதப்பட்டு இந்திய பதிவுச் சட்டத்தின் படி பதிவு செய்யாமல் உள்ளது என்று தெரியவருகிறது. ஓர் எழுத்து மூலமான பாகப்பிவரினை ஆவணமானது 1908-ம் ஆண்டின் இந்திய பதிவுச் சட்டம் பிரிவு 17-ன் படி கட்டாயம் பதிவு செய்யப்படவேண்டிய ஆவணமாகும். அதே போல் 1899-ம் ஆண்டின் இந்திய முத்திரைச் சட்டத்தின் படி ஒரு பாகப்பிரிவினை ஆவணமானது உரிய முத்திரை தாளில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது கட்டாய விதி ஆகும். வா.சா.ஆ.1 ஆவணமானது உரிய முத்திரை தாளில் எழுதப்படாததாலும் இந்திய பதிவு சட்டத்தின் படி பதிவு செய்யாததாலும், மேற்படி ஆவணத்தை அசல் வழக்கில் சாட்சியமாக எடுத்துக்கொள்ள முடியாது. இருந்தபோதிலும் வாதியின் உடைமையை பொருத்த துணை நோக்கத்திற்காக எடுத்துக்கொண்டாலும், வழக்கு சொத்தான சந்தானது வாதியின் குடும்பத்தாருக்கு மட்டும் பாத்தியமானது என்று எந்த வாசகமும் கண்டு எழுதப்படவில்லை என்று தெரியவருகின்றது.

**10.4)** வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆன வீட்டு வரி ரசீதுகள் மற்றும் வா.சா.ஆ.9 ஆன மின் கட்டண ரசீதுகள், வாதியின் வீட்டிற்கு செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள் மற்றும் வீட்டு வரி ரசீதுகள் என்று தெரியவருகிறது. மேற்படி ரசீதுகளுக்கும், வழக்கு சொத்திற்கும் என்ன சம்மந்தம் என்று வாதி தரப்பில் எந்த பொருண்மையும் தெரிவிக்கவில்லை. ஏனெனில், வழக்கு சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் எந்தவித வீடும் காட்டப்படவில்லை. வழக்கு

சொத்தாக சந்து மட்டும் தான் காட்டப்பட்டுள்ளது. வாதி தன்னுடைய வீடு உள்ள பூமியையும், வீட்டையும் வழக்கு சொத்தாக காண்பித்திருந்தால் தான் வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணங்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள முடியும். வாதியின் வீட்டை வழக்கு சொத்தாக காண்பிக்கப்படவில்லை என்பதால் மேற்படி ஆவணங்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**10.5)** வழக்கு சொத்தானது நிலவியலில் உள்ளது என்று இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி சந்தானது வாதியின் குடும்பத்தாருக்கு மட்டும் பாத்தியப்பட்ட சந்தா அல்லது பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தக் கூடிய பொது சந்தா என்று கண்டறிவது தான் இவ்வழக்கின் தீர்வுகுரிய பிரச்சனையாகும். வழக்கு புல எண்ணான 544N-ன் புல வரைபடம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில் வழக்கு புல எண்ணான 544/13 ஆனது சந்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி சந்தானது பொது சந்தா அல்லது வாதியின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சந்தா என்பதை நிரூபிக்க வாதி தரப்பில் எந்தவித வருவாய் ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. மேலும், வழக்கு சந்தானது வாதியின் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபணம் செய்ய கிராம நிர்வாக அலுவலரை வாதி தரப்பில் ஒரு சாட்சியாக விசாரிக்காதது வாதி தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே அமைவதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**10.6)** வழக்கு சொத்தானது கிழக்கு மேற்கு 12 ஜாதியடி, வடக்கு தெற்கு 129 ஜாதியடி என்று வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், வழக்கு சொத்தின்

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.02 17:37:52 +0530

விஸ்தீரணத்தை நிரூபிக்க வாதி தரப்பில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய எந்தவித மனுவும் தாக்கல் செய்யாதது வாதி தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே அமைவதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. இதிலிருந்து வழக்கு சொத்தின் நீளம் மற்றும் அகலத்தை வாதி தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**10.7)** பி.சா.ஆ.1 ஆன புல வரைபடத்தை பரிசீலனை செய்கையில் வழக்கு சந்தான புல எண்.544/13-க்கு மேற்கு பக்கம் 544/3, 544/4, 544/9, 544/11, 544/12, 544/16, 544/15, 544/14 ஆகிய பூமிகள் உள்ளன என்று தெரியவருகின்றது. வா.சா.1-ம் தனது குறுக்கு விசாரணையில் மேற்படி பொருண்மையை ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது. வா.சா.1-ன் குறுக்கு விசாரணையின் தொடர்புடைய வாசகங்கள் பின்வருமாறு:-

> *"சர்வே எண்.544/3, 17, 16, 8, 10, 15, 14, 12, 11 அனைத்துமே சர்வேஎண்.544/13 சந்தை ஒட்டி வருகிறது என்றால் சரிதான். மேற்சொன்ன அமைப்பு பல காலமாக அவ்வாறே இருந்து வருகிறது என்றால் சரிதான்"*

மேற்கண்ட சூழ்நிலையில், வழக்கு சந்தானது வாதியின் குடும்பத்தாருக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்பதை வாதி தகுந்த ஆவணங்களை கொண்டு நிரூபணம் செய்யவேண்டும். மாறாக வாதி தரப்பில் எவ்வித வருவாய் ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்திருந்தால் தான் வழக்கு சந்தானது பொது சந்தா அல்லது வாதியின்



PONVENTHAN D Digitally signed by PONVENTHAN D Date: 2026.07.02 17:37:57 +0530

குடும்பத்தாருக்கு மட்டுமே சொந்தமான சந்தா அல்லது எவ்வகையான பூமி என்று இந்நீதிமன்றத்தால் அறிந்திருக்க முடியும். மேற்படி பொருண்மை குறித்து நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்துவதற்கு வாதி தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது வாதியின் வழக்கிற்கு பாதகமாக அமைவதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**10.8)** வாதி தரப்பில் வா.சா.ஆ.12 ஆக அ.வ.எண்.418/1937 வழக்கில் மாண்பமை திண்டிவனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணை என்ன காரணத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று வழக்குரையில் எந்த வாதுரையும் குறிப்பிடப்படவில்லை. வாதுரையில் சொல்லப்படாத ஆவணங்களையோ, சாட்சியங்களையோ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்பது நிலைநிறுத்தப்பட்ட நிலைபாடாகும். அதனடிப்படையில் வா.சா.ஆ.12 ஆவணம் வாதியின் வழக்கில் பரிசீலனை செய்வதற்கு ஏற்றுக்கொள்ள முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**10.9)** வழக்கு புல எண்ணான 582-ன் 1.26-ல் 0.81-ல் கிழக்கு மேற்கு ஜாதியடி 27, தெற்கு வடக்கு ஜாதியடி 26 என்ற அளவுள்ள காலி மனையையும், கிழக்கு மேற்கு ஜாதியடி 12, தெற்கு வடக்கு ஜாதியடி 56 என்ற அளவுள்ள சந்து ஆகியவற்றை அய்யா முதலியார் என்பவருக்கு அருணாச்சலம் முதலியார் என்பவர் எழுதி கொடுத்த கிரைய ஆவணம் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில் மேற்படி ஆவணத்தில் சந்தானது பொது சந்து என்று



PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.02 17:38:02 +0530

குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. வா.சா.ஆ.13 ஆவணத்தின் தொடர்புடைய வாசகங்கள் பின்வருமாறு:-

*"ஷை சர்வேயில் மேட்டு மாரியம்மன் கோவில் வீதிக்கு தெற்கு, மேலே கண்ட கிரைய மனைக்கும், தங்கள் பாக மனைக்கும் மேற்கு, வக்கீல் அருணாச்சலம் முதலியார் மனைக்கு கிழக்கு, கோவிந்த முதலியார் வகையறா கி.மே பொதுச்சந்துக்கு வடக்கு. இதன் மத்தியில் கி.மே ஜாதியடி 12, தெ.வ ஜாதியடி 56 இந்த அளவுள்ள சந்தின் எனக்குண்டான போகவர பாத்தியமும் ஷை சர்வேயில் மேற்கண்ட முதல் அயிட்ட கிரைய மனைக்கும் தெற்கு, மேல்கண்ட பொதுசந்துக்கும் கிழக்கு, கோவிந்த முதலியார் மனைக்கு வடக்கு, மாணிக்கம் மனைக்கு மேற்கு. இதன் மத்தியில் கி.மே ஜாதியடி 27, தெ.வ ஜாதியடி 6 இந்த அளவுள்ள பொது சந்தில் எனக்குண்டான போகவர பாத்தியமும் தங்களுக்கு கிரையம்"*

**10.10)** வாதியின் சகோதரரான சிவராஜ் என்பவருக்கு தண்டபாணி என்பவர் வழக்கு சர்வே எண்ணில் உள்ள சொத்தை கிரையம் கொடுத்த கிரைய ஆவணம் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில் சக்குபந்தியில் பொது சந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தனி நபருக்கு பாத்தியப்பட்ட சந்து என்று எந்த வாசகமும் கண்டு எழுதப்படவில்லை என்றும் தெரியவருகிறது. வா.சா.ஆ.14 ஆவணத்தின் தொடர்புடைய வாசங்கள் பின்வருமாறு:-

Digitally signed by PONVENTHAN D
PONVENTHAN D
Date: 2026.07.02 17:38:07 +0530

*"திண்டிவனம் ரி.டி., வானூர் சப்.ரீ.டி புளிச்சப்பள்ளம் ஊராட்சிக்குள்பட்ட புளிச்சப்பள்ளம் கிராமத்தில் கி.ந.ரீ.சர்வே.153/23 பழைய சர்வே.582/1-ல் கி.மே ஜாதி அடி 26 (இருபத்தி ஆறு) தெ.வ ஜாதி அடி 54 (ஐம்பத்தி நான்கு) ஆக இந்த அளவுள்ள 1404 சதுர அடி கொண்ட காலி மனையும்.*

***இதற்கு சக்குபந்தி:-*** *முத்தையா முதலியார் மனைக்கு மேற்கு, மேட்டு மாரியம்மன் கோயில் தெருவிற்கு தெற்கு, பொது சந்துக்கு கிழக்கு, கோவிந்த முதலியார் மனைக்கு வடக்கு இதற்குள்பட்டது. (தற்போதைய நத்தம் சர்வே படி 544/17-ல் சம்மந்தப்பட்டது"*

வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.13 மற்றும் வா.சா.ஆ.14 ஆவணங்களிலும் வழக்கு சர்வே எண்ணில் பொது சந்து உள்ளதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தனி நபருக்கு பாத்தியப்பட்ட சந்து என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று தெளிவாக தெரியவருகிறது. வா.சா.1-ம் தனது குறுக்கு விசாரணையில் வழக்கு சொத்தானது அரசாங்க கணக்குகளில் பொது சந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தனது தாத்தா காலத்திலிருந்தே பொது சந்தாக உள்ளது என்று ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். மேற்படி வா.சா.1-ன் குறுக்கு விசாரணையின் தொடர்புடைய வாசகங்கள் பின்வருமாறு :-

*"சர்வே எண்.544/13 என்பது அரசாங்க ஆவணங்களின் படி அது பொது சந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எவ்வளவு காலம் அது பொது சந்தாக உள்ளது என்றால் எனது தாத்தா காலத்திலிருந்தே உள்ளது"*



PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.02 17:38:12 +0530

வா.சா.2-ம் தனது குறுக்கு விசாரணையில் வழக்கு சொத்தானது வண்டிப்பாதை என்று ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். வா.சா.2-ன் குறுக்கு விசாரணையின் தொடர்புடைய வாசகங்கள் பின்வருமாறு :-

> *"வழக்கு சொத்து ஒரு சந்து என்றால் சரியல்ல. வண்டி பாதை ஆகும். சுமார் 50, 60 வருடங்களாகவே தாவா சொத்து வண்டி பாதையாக உள்ளது. அந்த வண்டிபாதை வடக்கு தெற்காக அமைந்துள்ளது. "*

மேற்கண்ட சாட்சியம் மற்றும் விவாதங்களிலிருந்து வழக்கு சொத்தானது வாதியின் குடும்பத்தாருக்கு மட்டும் பாத்தியப்பட்ட சந்து என்று வாதி தரப்பில் நிரூபணம் செய்யாததாலும், வாதி மட்டுமே வழக்கு சொத்தில் அனுபவத்தில் உள்ளார் என்று நிரூபணம் செய்யாததாலும் வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்ற எழுவினா 1 மற்றும் 2-ற்கு வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**11. எழுவினா 3-ற்கான தீர்வு** : -

எழுவினா 1 மற்றும் 2-ற்கு வாதிக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதால் வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று இவ்வெழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**12. முடிவில், வழக்கானது தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.02 17:38:19 +0530

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 02-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.02 17:38:24 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வானூர்.**

**வாதி தரப்பு சாட்சிகள்**: -

வா.சா.1 :- முத்துக்குமார் ( வாதி)

வா.சா.2 :- தணிகைவேல் (3-ம் தரப்பினர்)

வா.சா.3 :- தண்டபாணி (3-ம் தரப்பினர்)

**1-ம் பிரதிவாதி தரப்பு சாட்சிகள் : -**

பி.சா.1 :- சிவக்குமார் (1-ம் பிரதிவாதி)

பி.சா.2 :- ராம்குமார் (3-ம் தரப்பினார்)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்: -**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 13.02.1964 | ராமலிங்க முதலியார், மகாதேவ முதலியார் திருநாவுக்கரசு முதலியார் ஆகியோர் அவர்களுக்குள் பிரித்துக்கொண்ட முத்திரை தாளில் எழுதப்படாத, பதிவு செய்யப்படாத பாகப்பத்திரம். | - அசல் |
| வா.சா.ஆ.2 | 22.07.2019 | விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு வாதி கொடுத்த புகார் மனு. | - நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.3 | 22.07.2019 | வாதி விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கொடுத்த புகார் மனுவிற்கான ரசீது. | - கணிணி நகல் |
| வா.சா.ஆ.4 | 24.08.2020 | வானூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுக்கு வாதி அனுப்பிய மனு. | - நகல் |
| வா.சா.ஆ.5 | 25.08.2020 | வானூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுக்கு அனுப்பிய மனுவிற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை. | - அசல் |
| வா.சா.ஆ.6 | 10.09.1998 | திருநாவுக்கரசு என்பவரின் இறப்புச் சான்றிதழ் | - உண்மை நகல் |
| வா.சா.ஆ.7 | 11.03.1991<br>08.06.1992<br>05.04.2012<br>24.03.2014<br>06.07.2017<br>15.07.2019 | வீட்டு வரி ரசீதுகள் | - அசல் |
| வா.சா.ஆ.8 | 31.03.2008<br>25.09.2012<br>06.10.2014<br>15.07.2019 | வீட்டு வரி ரசீதுகள் | - அசல் |
| வா.சா.ஆ.9 | 09.09.2015<br>09.09.2015<br>29.11.2015<br>25.01.2016<br>20.05.2016<br>23.05.2016<br>28.05.2016<br>22.07.2016 | மின் கட்டண ரசீதுகள். | - அசல் |

| | | | |
|---|---|---|---|
| | 15.11.2016<br>20.01.2018<br>09.11.2018<br>14.03.2019<br>13.05.2019<br>18.01.2020<br>18.01.2020<br>06.03.2020<br>26.05.2020<br>13.07.2020 | | |
| வா.சா.ஆ.10 | --- | வாதியின் ஆதார் அட்டை. | - நகல் |
| வா.சா.ஆ.11 | 30.11.2022 | வழக்கு சொத்தை காண்பிக்கும் புல வரைபடம் | - சான்று நகல் |
| வா.சா.ஆ.12 | 21.09.1938 | மாண்பமை திண்டிவனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அ.வ.எண்.418/1937 வழக்கில் பிறப்பித்த தீர்ப்பாணை. | - சான்று நகல் |
| வா.சா.ஆ.13 | 21.06.1965 | அருணாச்சலம் முதலியார் என்பவர் அய்யா முதலியார் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம். | - அசல் |
| வா.சா.ஆ.14 | 10.08.2005 | P.A.தண்டபானி என்பவர் T.சிவராஜ் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம். | -அசல் |

**1-ம் பிரதிவாதி தரப்பு சாண்றாவணங்கள்: -**

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 19.11.2024 | புல எண்.544N-ன் புல வரைபடம். | - கணிணி நகல் |
| பி.சா.ஆ.2 | 04.05.1959 | ஆறுமுக முதலியார் என்பவர் சுப்பு முதலியார் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய | - அசல் |

| | | | |
|---|---|---|---|
| | | ஆவணம். | |
| பி.சா.ஆ.3 | 07.10.1995 | புல எண்.544/8-க்கு வேதாசலம் என்பவர் பெயரில் வழங்கப்பட்ட மனைவரி தோராய பட்டா. | - அசல் |
| பி.சா.ஆ.4 | 07.07.2015<br>05.05.2016<br>06.07.2016<br>25.01.2017 | மின் கட்டண ரசீதுகள். | - அசல் |
| பி.சா.ஆ.5 | 04.03.1988 | வீட்டு வரி ரசீது. | - அசல் |

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.02 17:38:44 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வானூர்.**